KURIKULUM STANDARD SEKOLAH RENDAH

# இசைக் கல்வி

# PENDIDIKAN MUZIK

ஆண்டு
TAHUN
6

SEKOLAH JENIS KEBANGSAAN TAMIL

தேசிய வகைத் தமிழ்ப்பள்ளி


**PENULIS**
ஆசிரியர்கள்

Risikesh Subramaniam
ரிஷிகேஷ் சுப்ரமணியம்

Vaani Subramaniam
வாணி சுப்ரமணியம்





**EDITOR**
பதிப்பாசிரியர்கள்

Vijayan Khrishnan
விஜயன் கிருஷ்ணன்

Anbarasan Mutugayan
அன்பரசன் முருகையா





**PEREKA BENTUK**
வடிவமைப்பாளர்


Amos Raja
ஆமோஸ் ராஜா





**ILUSTRATOR**
ஓவியர்

Azrul Helmi Bin Abd.Wahab
அஸ்ருல் ஹெல்மி பின்
அப்துல் வஹாப்


**Multi Educational Book Enterprise**
**2015**

No Siri Buku : 0100
ISBN 978-983-9286-86-1

Cetakan Pertama 2015

© MULTI EDUCATIONAL BOOK ENTERPRISE

Hak Cipta Terpelihara. Tidak dibenarkan menerbitkan semula mana-mana bahagian artikel, ilustrasi dan isi kandungan buku ini dalam apa juga bentuk dan dengan cara apa jua sama ada secara elektronik, fotokopi, mekanikal, rakaman atau cara lain sebelum mendapat izin bertulis daripada **Multi Educational Book Enterprise.**

**Penerbit:**

**Multi Educational Book Enterprise.**
No. 22A-2, Jalan PJS 8/4, Dataran Mentari,
Bandar Sunway, 46150 Petaling Jaya,
Selangor Darul Ehsan.
Tel : 03-5636 2568 Faks : 03-5636 0825
E-mel : multiedu@yahoo.com
www.multiedu.com.my

**Jenis dan saiz huruf :**
Dhanyeta 14/12 poin

**Dicetak oleh :**

Aslita Sdn. Bhd. (146102-U)
No, 20, Jalan 4/10B, Spring Crest Industrial Park
Batu Caves, 68100 Kuala Lumpur.
Tel : 03-6186 7645 Faks : 03-6186 7635
E-mel : aslita2000@yahoo.com


# PENGHARGAAN

**Multi Educational Book Enterprise** ingin merakamkan setinggi-tinggi penghargaan kepada pihak-pihak berikut:

- Bahagian Buku Teks, Kementerian Pendidikan Malaysia
- Bahagian Pembangunan Kurikulum, Kementerian Pendidikan Malaysia
- Jawatankuasa Kawalan Mutu Penerbit
- Organisasi / Institusi yang telah memberi kerjasama dan membenarkan karya atau bahan terbitannya digunakan sebagai bahan pembelajaran

  * Muzium Negara Malaysia
  * Arkib Negara
  * Jabatan Kebudayaan dan Keseniaan Negara
  * Bharathi Fine Arts,Taman Melawati, Kuala Lumpur.

Ribuan terima kasih juga diucapkan kepada pihak yang telah memberi sumbangan dalam menjayakan penerbitan buku teks ini. Pelbagai inisiatif telah diambil oleh pihak penerbit untuk mengesan semua pemilik hak cipta bahan dalam buku teks ini. Walau bagaimanapun, pihak penerbit mengalu-alukan jasa baik pihak berkenaan untuk membenarkan kami menerbit semula bahan itu. Diharapkan maklumat pihak berkenaan dapat kami peroleh supaya dapat merakamkan ucapan penghargaan dalam edisi yang akan datang.

# உள்ளடக்கம்


முன்னுரை v

**அலகு 1**

ஓசையின் சுதி 1
பாடு 2
சுர விளையாட்டு 3
குரல் அடுக்குப் பாடல் 4
இன்னிசையும் கேள்வி பதிலும் 5
இன்னிசைப் பாடலும் எதிர்ப் பாடலும் 6
குரல் அடுக்குக் கலவை 7

**அலகு 2**


பாடலும் இயக்கமும் 9
சுரவரிசையைப் பாடுவோம் 10
சுரவரிசைப் பாடல் 11
தாள மாத்திரை 12
இசைக்கு ஏற்ப அசைதல் 16
ஒலித்தன்மை அசைவு 17
ஒலித்தன்மைக்கு ஏற்ற கதாபாத்திரம் 18
பண்ணிசை இயக்கம் 19

**அலகு 3**

தொனியில் பாடு 21
தாள வேகத்தை அறிவோம் 22
தாள வகைக்கு ஏற்ப இசைத்தல் 23
தொனி அளவு 25
தாள வேறுபாடு 26

**அலகு 4**

இசைக் குடும்பம் 29
பாடுவோம் வாரீர் 30
நன்றாகப் பாடுவோம் 31
இசைக் குறியீடுகள் 32
இசைக் குறியீடுகளும் பொருளும் 33
இசைக் குறியீடும் பாடலும் 34
ஒலியேற்றமும் ஒலித்தணிவும் 35
எங்கும் இசை 36
பாடுவோம் வாரீர் 37



அலகு 5
இசைப் பாடல் 39
முறையாகப் பாடுதல் 40
விட்டு விட்டுப் பாடுதல்; சரளமாகப் பாடுதல் 41
இயங்குவோம் வாரீர் 42

அலகு 6
இசை அறிவு 45
இசைக் குறியீட்டை அறிவோம்; எழுதுவோம் 46
என்னை நினைவிருக்கின்றதா? 50
தாள மாத்திரை 51
குறுக்கெழுத்து 52
சுரம் வாசிப்போம் 53
பயிற்சி செய்வோம் வாருங்கள் 54
வளப்படுத்தும் பயிற்சி 56
இசைத் தொடரை வாசிப்போம் - ரெக்கோடர் 57
வாசிப்பதை வளப்படுத்துவோம் 58
இன்னிசை ரெக்கோடர் 59
இன்னிசை மற்றும் இன்னிசை வரைகளை வாசிப்போம் 60
பல்வகை நடை - ரெக்கோடர் 61

அலகு 7
தாள இசை 63
இயக்காற்றல் ஒலி 64
இயக்காற்றல் - ரெக்கோடர் 65
தாளத்தை உருவாக்குவோம் 66
காதில் ஒலி 67
சொன்னதைச் சொல் 68

அலகு 8
இசை விழா 70
எங்கள் இசைக் கருவிகள் 71
கேட்கும் ஆற்றல் 72
கதைப் பாட்டு 74
ஓணான் ஓணான் மணி எத்தனை? 75
மெட்டுக்கு மெட்டு 76
கொம்பாங் இசை 77
கொம்பாங் இசைப்போம் 78
ஆசிய இசை 79
மேற்கத்திய பாரம்பரிய இசை 80
புகழிசை 81





# முன்னுரை

ஆறாம் ஆண்டு இசைப்பாடம், புதிய பாடத் திட்டத்தின் தொடர்ச்சியாகும். இது இசைநூலும் ஒலிவட்டும் இணைந்த தொகுப்பு. நான்காம், ஐந்தாம், ஆண்டில் கற்றத் திறன்களை மேலும் வளப்படுத்தும் நடவடிக்கையாக இது திகழ்கிறது.

கலைத் திட்டத்தை அடிப்படையாகக் கொண்ட இந்நூல் மொத்தம் எட்டு அலகுகளாகத் தயாரிக்கப்பட்டுள்ளது. இசைத் திறன்களான இசை அனுபவம், இன்னிசை, ரெக்கோடர், இசை உருவாக்கம், பல்வகை இசை மற்றும் இசைக் குறியீடுகள் அனைத்தும் ஒருங்கிணைத்துத் தரப்பட்டுள்ளன. மாணவர்கள் அடைய வேண்டிய சிந்தனைத் திறன், பண்புக் கூறுகள், இசைத் திறன் ஆகியற்றை எளிமையாகவும் மாணவர்களை ஈர்க்கும் வண்ணமும் படைக்கப்பட்டுள்ளன.

பாடநூலின் அனைத்து கூறுகளும் செயலாக்க முறையில் மாணவர்களின் அனுபவத்திற்கேற்ப பல்வகை அணுகுமுறையோடு வழங்கப்பட்டுள்ளன. பாடங்கள் சிறிய தலைப்புகளில், படச் சின்னங்களோடு தரப்பட்டுள்ளன. இவை இசைக் கற்றலில் மாணவர்களின் ஆர்வத்தை தூண்டும் என்று நம்புகிறோம்.

மாணவர்களின் இசை ஆற்றலை வளப்படுத்துவதற்கு இசை வட்டுகளில் பாடல்களும், ரெக்கோடர் இசையும் மேலும் பல்வேறு ஒலிகளும் பதிவு செய்யப்பட்டுள்ளன. மாணவர்கள் இசையை எளிமையாகப் புரிந்துகொள்ள இந்த இசை வட்டு பேருதவியாக இருக்கும்.

இந்நூலின் ஒவ்வொரு படைப்பும், மாணவர்களின் இசை ஆற்றலை மேம்படுத்துவதோடு ஈடுபாட்டுடன் பயில ஏதுவாக அமையும் என்று நம்புகிறோம்.

அன்புடன்,
ஆசிரியர்கள்.

பின்வரும் படச் சின்னங்கள் இந்த இசை நூலை எளிய முறையில் பயன்படுத்தத் துணை புரியும்.



**தலைப்பு**

மாணவர்களின் இயல்பான கற்றலுக்கு



**நடவடிக்கை**

மாணவர்கள் சுய அனுபவம் பெறுவதற்கு




**இணையத் தளம்**

இணையத்தின்வழி தகவலைப் பெறுவதற்கு



**வளப்படுத்துதல்**

மாணவர்கள் பல நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு



**உனக்குத் தெரியுமா?**

மாணவர்களிடம் வினா எழுப்பி விடை காண்பதற்கு



**ஆசிரியர் குறிப்பு:**

ஆசிரியர்களுக்கு வழிகாட்டியாக அமைவதற்கு



**சிந்தனைக்கு**

மாணவர்களின் சிந்தனையைத் தூண்டுவதற்கு




**பயிற்சி**

மாணவர்களின் கற்றல் தரத்தைச் சோதிப்பதற்கு

# அலகு 1

## சுதியின் ஓசை




- ஒவ்வொரு இசைக் கலைஞர்களின் நடவடிக்கையைக் கூறுக.
- இவர்கள் ஒன்றிணைந்து செயல்படுவதால் ஏற்படும் நன்மைகளைக் கூறுக.



## சுதியில் பாடு





Track 1 Latihan Pic 1



Track 2 Latihan Pic 2



Track 3 Latihan Pic 3





1.1.1
1.1.7


ஆசிரியர் குறிப்பு:

- பாடுவதற்கு முன் மூச்சுப் பயிற்சி செய்வித்தல் வேண்டும்.
- சுதி தொடர்பாகக் கலந்துரையாடுதல்.
- இசைப் பலகையின் (key board) வழி பயிற்சி வழங்குதல்.
- ஒவ்வொரு பயிற்சியையும் தனி ஆளாகவும் பின் குழு முறையிலும் பாடப் பணித்தல்.



## சுர விளையாட்டு

சுர தாயக் கட்டை விளையாடுவோம் வாருங்கள்.




1. ஒவ்வொரு குழுவிற்கும் ஒரு தாயக்கட்டையைக் கொடுத்தல்.
2. ஒவ்வொரு மாணவரும் நான்கு முறை தாயக் கட்டையை வீசுவர். கிடைக்கின்ற எண்ணுக்கேற்ற சுரத்தைக் கெர்வென் சுரச் சைகையோடு பாடுவர்.

| எண்ணிக்கை | ⚀ | ⚁ | ⚂ | ⚃ | ⚄ | ⚅ |
|---|---|---|---|---|---|---|
| சுர வகை | Do Re mi | So Fa So | Do Ti La | Do Do Re | Mi Fa So | La Ti Do' |

### தகவல்

கெர்வென் சுரச் சைகையை மாணவர்களுக்கு அறிமுகப்படுத்தியவர் சோல்தான் கொடாய். இவர் மாணவர்களைக் கவரும் வகையில் எளிமையான அணுகுமுறையில் சுரச்சைகையை அறிமுகப்படுத்தினார்.



I.1.1
I.1.7



ஆசிரியர் குறிப்பு:

- மாணவர்களை இவ்விளையாட்டில் குழு முறையில் ஈடுபடப் பணித்தல்.
- மாணவர்கள் சரியான சுரத்தைப் பாடும்வரை மீண்டும் செய்யப் பணித்தல்.

# குரல் அடுக்குப் பாடல்




ஆசிரியர் குறிப்பு:

1.1.1
1.1.2
1.1.7

- ஆசிரியர் குரல் அடுக்கு தொடர்பான விளக்கப் படங்களைக் காண்பித்துக் கலந்துரையாடுதல்.
- இன்னிசையும் எதிர்ப் பாடலும் தொடர்பான விளக்கங்களைச் சுருள்படம் மூலம் விளக்குதல்.
- எடுத்துக்காட்டுப் பாடல்களைப் பாடிக் காட்டுதல்; இசை வட்டின் மூலம் செவிமடுக்கச் செய்தல்.

## இருமடி குரல்

# Istana Ratu

Track 4 Lagu
Track 5 Instrumental




ஆசிரியர் குறிப்பு:

1.1.1
1.1.2
1.1.7

- இன்னிசையும் கேள்வியும் தொடர்பான பாடலைக் குழுவாரியாகப் பாடுதல்.
- மாணவர்களைப் பாடலின் பொருளுக்கு ஏற்ப அபிநயம் செய்து கொண்டும் உணர்ச்சியுடன் பாடத் தூண்டுதல்.

## இன்னிசைப் பாடலும் எதிர்ப் பாடலும்

பாடியவர்: எஸ்.பி. பாலசுப்ரமணியம்
இயற்றியவர்: பழனி பாரதி



எடுடா அந்தச் சூரிய மேளம்
அடிடா நல்ல வாலிபத் தாளம்
எழுந்து விட்டோம் இமயம் போலே
உயர்ந்து நிற்கும் சிகரம் எல்லாம் நமக்கு கீழே
(எடுடா அந்த சூரிய மேளம்)
ஆணையிட்டால் விண்ணும்கூட
வந்து நிற்க வேண்டும் நமது காலின் கீழே (2)

மேகத்தைக் கையில் பிழிந்து பார்க்கலாம்
பாலையின் தாகம் தீர்த்து வைக்கலாம்
நிலவுக்கும் மீசை வரைந்து பார்க்கலாம்
சொர்க்கத்தின் ஜன்னல் திறந்து பார்க்கலாம்

பூமியைத் தோளில் சுமந்து செல்லலாம்
பூவுக்குள் புயலைப் பூட்டி வைக்கலாம்
வானத்தில் பேரை எழுதி வைக்கலாம்
சூரியன் தொட்டு முத்தம் கேட்கலாம்
வாழ்க்கை இங்கே நதிகள் போலே
வாழ்வதற்கு வா வா இங்கே நீச்சல் அடி
(எடுடா அந்த சூரிய மேளம்)

கண்ணீரை இனி தள்ளி வைக்கலாம்
புன்னகைப் பூவை அள்ளி வைக்கலாம்
பறவைகள் கூட்டி விருந்து வைக்கலாம்
இறக்கைகள் கேட்டு பறந்து பார்க்கலாம்

தேவதை தேசம் சென்று வரலாம்
வண்ணங்கள் தூவி குதூகலிக்கலாம்
இளமைத் துள்ள அணிவகுக்கலாம்
கவிதை சொல்லி கை குலுக்கலாம்
இன்னும் என்ன இன்பமுண்டு
கண்டெடுத்து வா வா இங்கே அனுபவிக்கலாம்
(எடுடா அந்த சூரிய மேளம்)

### நடவடிக்கை

- முதல் குழு பாடுதல்
- இரண்டாவது குழு எதிர்ப் பாடல் பாடுதல்.

### சிந்தனைக்கு

பாடலில் கவிஞரின் உயரிய சிந்தனையை விளக்குக.
**(KBAT)**

1.1.1
1.1.2
1.1.7

ஆசிரியர் குறிப்பு:

- பாடலின் பொருளை மாணவர்களுடன் கலந்துரையாடுதல்.
- இன்னிசையும் எதிர்ப் பாட்டுக்கும் ஏற்ப மாணவர்களைப் பாடத் தூண்டுதல்.

## குரல் அடுக்குக் கலவை

**இப்பாடலை எல்லா விதமான குரல் அடுக்குகளைக் கொண்டு பாடுங்கள் பார்ப்போம்.**

பாடியவர்: டி.எம். சௌந்தராஜன்
இயற்றியவர்: கவிஞர் வாலி

உலகம் பிறந்தது எனக்காக ஓடும் நதிகளும் எனக்காக
மலர்கள் மலர்வது எனக்காக அன்னை மடியை விரித்தாள் எனக்காக
உலகம் பிறந்தது எனக்காக ஓடும் நதிகளும் எனக்காக
மலர்கள் மலர்வது எனக்காக அன்னை மடியை விரித்தாள் எனக்காக
(உலகம் பிறந்தது)

காற்றில் மிதக்கும் ஒலிகளிலே கடலில் தவழும் அலைகளிலே
இறைவன் இருப்பதை நானறிவேன் என்னை அவனே தானறிவான்
இறைவன் இருப்பதை நானறிவேன் என்னை அவனே தானறிவான்.
(உலகம் பிறந்தது)

தவழும் நிலவாம் தங்கரதம் தாரகை பதித்த மணி மகுடம்
குயில்கள் பாடும் கலைக்கூடம் கொண்டது எனது அரசாங்கம்
குயில்கள் பாடும் கலைக்கூடம் கொண்டது எனது அரசாங்கம்
(உலகம் பிறந்தது)

எல்லாம் எனக்குள் இருந்தாலும் என்னைத் தனக்குள் வைத்திருக்கும்
அன்னை மனமே என் கோயில் அவளே என்றும் என் தெய்வம்
அன்னை மனமே என் கோயில் அவளே என்றும் என் தெய்வம்
(உலகம் பிறந்தது)

### நடவடிக்கை

- இப்பாடலை ஒவ்வொரு குரல் அடுக்கிலும் பாடிப் பழகு.

### சிந்தனைக்கு

6ஆம் பக்கத்திலுள்ள புதிய பாடலுக்கும், இப்பாடலுக்கும் உள்ள கற்பனை வளத்தைப் பற்றி கலந்துரையாடுக.

1.1.1
1.1.5
1.1.6
1.1.7


ஆசிரியர் குறிப்பு:

- பாடலின் பொருளை மாணவர்களுடன் கலந்துரையாடுதல்.
- இசையின் துணையோடு அசைந்து கொண்டே பாடத் தூண்டுதல்.



## பயிற்சி I

அ. காலியிடங்களில் சரியான சுர வரிசையை (சோல்பாவை) நிறைவு செய்து பின் சரியாகப் பாடுக.





ஆ. சரியான சுதியோடும் உச்சரிப்போடும் பாடுக.

i)




ii)




இ. அன்றாட வாழ்க்கையில் தடை ஓசை, தொடர் ஓசை தொடர்பான நடவடிக்கைளைப் பட்டியலிடுக.


Staccato - தடை ஓசை

Legato - தொடர் ஓசை

# அலகு 2

## பாடல் இயக்கம்

சின்னச் சின்ன தூறல் என்ன
என்னைக் கொஞ்சும் சாரல் என்ன
சிந்தச் சிந்த ஆவல் என்ன
நெஞ்சில் பொங்கும் பாடல் என்ன



- பாடலின் பொருளை அறிந்து பாடுக.
- கவிதைக்கு ஏற்ப இயங்குக



## சுரவரிசையைப் பாடுவோம்





### விளையாடும் முறை

* மாணவர்களைக் குழுக்களாகப் பிரித்தல்.
ஒவ்வொரு குழுவிலும் 7 மாணவர்கள் இருப்பர்.
* ஒவ்வொரு மாணவரும் சுரவரிசைக்கு ஏற்ப வரிசையில் நிற்பர்.
* ஒவ்வொரு மாணவரும் சுரத்தைப்பாடிக் கொண்டே திரும்புவர்.
* ஒவ்வொரு குழு மாணவர்களும் சோல்பா குறியீட்டைக் காட்டிக் கொண்டே சுரத்தைப் பாடுவர்.
* பிழையாகப் பாடும் மாணவர்கள் குழுவிலிருந்து வெளியேற்றப்படுவர்.
* எந்தக் குழுவில் அதிக மாணவர்கள் உள்ளனரோ அவர்களே வெற்றியாளர்கள்.

### சோல்பா - சுரவரிசைப் பயிற்சி






1.1.3
1.1.7

ஆசிரியர் குறிப்பு:

- பாடுவதற்கு முன் மூச்சுப் பயிற்சியைச் செய்வித்தல் வேண்டும்.
- சுரவரிசை அட்டை - சுரச்செய்கை அட்டையைப் பயன்படுத்தி கூறும் முறையை வகுப்பில் கலந்துரையாடுதல்.
- ஆசிரியர் சுரத்தை இசைக்க மாணவர்களை விளையாட்டில் ஈடுபடத் தூண்டுதல்.




## சுரவரிசைப் பாடல்

# Hot Cross Bun



Track 6 Solfa

நண்பர்களே, வாருங்கள் ஹோட் குரோஸ் பன் (Hot cross bun) என்ற பாடலைச் சுர வரிசையில் பாடுவோம். பின் பாடலின் வரிகளைச் சுர வரிசைக்கு ஏற்ப பாடுவோம்.






### நடவடிக்கை

குறைந்த மதிப்பைக் கொண்ட சுரத்தை அடையாளங்கண்டு கூறுங்கள்.



### சிந்தனைக்கு

- இசைக்கு எத்தனை சுரங்கள் உள்ளன?
  DO,RE,MI,FA,SO,LA,TI
  ச, ரி, க, ம, ப, த, நி
  7 சுரங்கள்




ஆசிரியர் குறிப்பு:


I.I.3
I.I.7


- மாணவர்களைத் தாழ் Do சுரவரிசையிலிருந்து மேல் Do வரை இசைப் பலகையின் உதவியுடன் பாடத் தூண்டுதல்.
- மாணவர்கள் பாடும்பொழுது கெர்வென் சுரச் சைகைகளைச் செய்து கொண்டே பாடுதல்.
- ஒலிவட்டை கவனமாகச் செவிமடுத்தல், பின் பாடலைப் பாடத் துணை புரிதல்.



## தாள மாத்திரை




**குறிப்பு**

தாள மாத்திரைகள் பலவகைப்படும் அவற்றில்

$\frac{2}{4}$ $\frac{3}{4}$ $\frac{4}{4}$ குறிப்படத்தக்கவை.




1.2.1


ஆசிரியர் குறிப்பு:


- இசைக் கருவியைத் தாளத்திற்கு ஏற்ப முறையாக வாசிக்கத் தூண்டுதல்.
- மாணவர்களைத் தாள வகை $\frac{2}{4}$ $\frac{3}{4}$ $\frac{4}{4}$ என்ற தாள மாத்திரைக்கு ஏற்ப வாசிக்கத் தூண்டுதல்.

## Button you must wander

Track 7 Lagu
Track 8 Perkusi









1.1.1
1.1.7
1.2.1
1.2.4


ஆசிரியர் குறிப்பு:


- ஒலிவட்டில் உள்ள பாடலைக் கவனமாகக் கேட்டல்.
- மாணவர்கள் தாள அமைப்புக்கு ஏற்ப சரியாகப் பாடத் துணை புரிதல்.
- தாள அமைப்புக்கு ஏற்ப இசைக் கருவிகளை இசைக்கத் தூண்டுதல்.
- இசைக் கருவிகளை இசைத்தப்படியே பாடலைப் பாடத் துணை புரிதல்.


# Arirang

Track 9 Lagu
Track 10 Perkusi

பாடல் ஒலி வட்டில் ஒலிக்கப்படும், இசைக்கு ஏற்ப இசைக் கருவிகளை இசைத்திடுக.






1.1.1
1.1.7
1.2.1
1.2.4

ஆசிரியர் குறிப்பு:


- தாளத்திற்கு ஏற்ப இசைக்கத் தூண்டுதல்.
- குழு முறையில் ஒவ்வொரு சீராக இசைக்கத் தூண்டலாம்.


# Ulik Mayang




Track 11 Lagu
Track 12 Perkusi

(உலிக் மாயாங்) பாடலுக்கு ஏற்ப இசைக் கருவிகளை இசைத்திடுக.






1.1.1
1.1.7
1.2.1
1.2.4

ஆசிரியர் குறிப்பு:

- மாணவர்களைத் தாளத்திற்கு ஏற்ப கை தட்டிப் பயிற்றுவித்தல்.
- நன்றாகப் பயிற்சி பெற்ற பின்னர் இசைக் கருவிகளைப் பயன்படுத்தத் தூண்டுதல்.
- தாளத்திற்கு ஏற்பவும் ஓய்வுக் குறியீட்டிற்கு ஏற்பவும் இசைக்கத் தூண்டுதல்.

## இசைக்கு ஏற்ப அசைதல்

Track 13 Pergerakan

### விளையாட்டு: யார் அடுத்தவர்?




### விளையாடும் முறை

1. ஆசிரியர் மாணவர் ஒருவரைத் தேர்வு செய்வார். அம்மாணவர் ஒலிக்கப்படும் இசைக்கு ஏற்ப அசைவார்.
2. மற்ற மாணவர்கள் அவருடைய அசைவைப் பின்பற்றி இயங்குவர்.
3. சில நிமிடங்களுக்குப் பிறகு அசைந்த மாணவர் மற்றொரு மாணவரைத் தேர்வு செய்வார்.
4. தேர்வு செய்யப்பட்ட மாணவர் உடனடியாக இசைக்கு ஏற்ப புதிய அசைவைச் செய்வார்.
5. இந்நடவடிக்கையை இசை முடியும்வரை தொடர்ச்சியாக விளையாடுவர்.

**தகவல்**

அசைவு உடலின் ஒவ்வொரு அங்கங்களிலிருந்தும் தோன்ற வேண்டும்.

1.3.1
1.3.2

ஆசிரியர் குறிப்பு:

- இசைக்கேற்ப ஏற்ப மாணவர்களை அசையச் செய்தல்.
- ஆசிரியர் பல்வேறு இசைகளை ஒலிபரப்ப மாணவர்கள் இசைக்கு ஏற்ப இயங்குதல்.
- இசைக்கேற்ற இயக்கம் தொடர்பான ஒளிக்காட்சிகளைப் பார்த்தல்.

## ஒலித்தன்மைக்கு ஏற்ற அசைவு

பல்வகை ஒலிக் கலவையே ஒரு சிறந்த இசை உருவாக்கமாகும். பல்வகை ஒலித் தன்மைகளை உள்ளடக்கியதே ஒலிக்கலவை ஆகும். ஒவ்வொரு ஒலி படைப்பும் ஒலி எண்ணிக்கை அடுக்குக்கு ஏற்ப மென்மையானதாகவும் தடித்தும் காணப்படும். ஒலித் தன்மைக்கு ஏற்ப உடல் இயக்கத்தைக் காட்டலாம்.

- மென்மையான ஒலி (ஒருவர் பாடுவது)
- தடித்த ஒலி (ஒருவருக்கு மேற்பட்டோர் பாடுவது)


**தகவல்**

ஒலித் தன்மை
sound effect

Track 14 Pergerakan

**தேசத்தின் மானம்**

நம் தேசத்தின் கொடி
கம்பீரமாய் பறக்கிறது;
காற்றில்லாதபோது
நிதானமாய் நிற்கிறது;
மழைநீர் படும் பொழுது
பொறுமையாய்
நனைகிறது;
சுட்டெரிக்கும் வெயிலில்
சோர்ந்திடாமல்
நிற்கிறது;
நம் தன்மானத்தைத்
தலை நிமிர்ந்து
காக்கிறது.



ஆசிரியர் குறிப்பு:


1.3.1
1.3.2

- மாணவர்களுக்கு ஒலித்தன்மையையும் அசைவையும் விளக்குதல்.
- ஒலிவட்டின் இசைக்கேற்ப பல்வகையாக இயங்குதல்.
- பாடலின் ஒவ்வொரு சீருக்கு ஏற்ப மாணவர்களை இயங்கத் தூண்டுதல்.
- ஒலித்தன்மைக்கு ஏற்ற அசைவை திறந்த வெளியில் செய்யப் பணித்தல்.

## ஒலித்தன்மைக்கு ஏற்ற பாத்திரப் படைப்பு

Track 15 Pergerakan

ஒவ்வொரு ஒலித்தன்மைக்கும் தனி தொனியமைப்பு உள்ளது. வாருங்கள் நாம் ஒலித்தன்மைக்கு ஏற்பவும் பாடலுக்கு ஏற்பவும் அசைவோம்.






நண்பர்களே கொடுக்கப்பட்டுள்ள பாடலுக்கு ஏற்ப ஒவ்வொரு இடமாக அசைந்து கொண்டு செல்லுங்கள்.

ஆசிரியர் குறிப்பு:

1.3.1
1.3.2

- ஆசிரியர் கொடுக்கப்பட்டுள்ள விலங்குகளின் பாத்திரப் படைப்பிற்கு ஏற்ற முகமூடிகளைச் செய்து மாணவர்களை ஈடுபடச் செய்தல்.
- இசைக்கு ஏற்ப உடல் உறுப்புகளை அசைத்துக் கொண்டும் ஒலி எழுப்பிக் கொண்டும் இயங்குதல்.
- இதே போன்று இசைக்கு ஏற்ப வேறு இயக்கங்கள் செய்யத் தூண்டுதல்.
- மாணவர்கள் அசைவுகளைச் செய்யும் பொழுது கவனமாகச் செய்ய வலியுறுத்துதல்.

# பண்ணிசை இயக்கம்

Track 16 Pergerakan

மாணவர்களே, பண்ணிசை இசையின் தன்மையாகும். இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட கலவையே பண்ணிசை. இதில் செருகிசை (melodi kaunter) ஓரைச்சுரம் (dron) தொடர் தாளம் (ostinato melodi) ஆகியவை இணைந்த கூட்டாகும்.

மாணவர்கள் குடையை வைத்து இயங்குவது போல் நாமும் இயங்குவோம்.




1.3.1
1.3.2

ஆசிரியர் குறிப்பு:

- மாணவர்களை குழு முறையில் இயங்கத் தூண்டுதல்.
- வேறு உபகரணங்களைப் பயன்படுத்தி இயங்கத் தூண்டலாம்.



## பயிற்சி 2

**அ. தாள மாத்திரையின் பொருளை விளக்குக.**

i) மீட்டர் $\frac{2}{4}$

ii) மீட்டர் $\frac{4}{4}$

**ஆ. கூற்றுக்கு ஏற்ப சரி - பிழை என்று எழுதுக.**

i) ஒலித்தன்மை பல வகையான ஒலி அடுக்குகளைக் கொண்டிருக்கும். [ ]

ii) பண்ணிசை என்பது இரண்டிற்கு மேற்பட்ட இசைக் கலவையாகும். [ ]

iii) AB, ABA, AA ஒரு வகை இசையாகும். [ ]

iv) செருகிசை, ஓரைச்சுரம், தொடர்தாளம் ஆகியவை பண்ணிசையின் கலவையாகும். [ ]

v) தடித்த குரலும் மென்மையான குரலும் ஒலித் தன்மையின் அங்கமாகும். [ ]

**இ. கெர்வென் சுரச் சைகையோடு சுரவரிசையை இணைத்திடுக.**

i) Do

ii) Re

iii) Mi


iv) Fa

v) So

vi) La

vii) Ti

viii) Do’



# அலகு 3 தொனியில் பாடு

யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்
வான்பற்றி நின்ற மறைபொருள் சொல்லிடின்
ஊன்பற்றி நின்ற உணர்வு மந்திரம்
தான்பற்றப் பற்ற தலைப்படும் தானே!
(திருமந்திரம்)




- பாடலின் பொருளைக் கலந்துரையாடல்.
- இசையின் வழி நீங்கள் பெற்ற இன்பம் என்ன?

## தாள வேகத்தை அறிவோம்

தாள வேகம் பாடலுக்கு ஏற்ப விரைவாகவும் மெதுவாகவும் இருக்கும். மாணவர்கள் இதை உணர்ந்து இசைக் கருவியை இயக்க வேண்டும். இப்பொழுது விளையாட்டின்வழி தாள வேகத்தை மேலும் அறிவோம்.




ஆசிரியர் குறிப்பு:

I.2.2

- ஆசிரியர் தாள வேக அட்டைகளைத் தயார் செய்து இவ்விளையாட்டில் மாணவர்களை ஈடுபடச் செய்தல்.
- இசையை இயக்கிக் கொண்டே இவ்விளையாட்டில் ஈடுபடத் தூண்டுதல்.
- மாணவர்கள் கூறும் விளக்கத்தை விரிவுபடுத்துதல்.



## தாள வேகத்திற்கு ஏற்ப இசைத்தல்

பல்வேறு தாள வேகத்திற்கு ஏற்ப இசைக் கருவிகளை இசைத்தல் (விரைவாகவும், மெதுவாகவும்)

### When The Saints







Track 17 Lagu
Track 18 Perkusi




I.2.2
I.2.4





ஆசிரியர் குறிப்பு:


- மாணவர்கள் தாள வேகத்திற்கு ஏற்ப பாடுவதை உறுதிப்படுத்துதல்.
- தாள இசைக் கருவியைப் பயன்படுத்திப் பாடுவதற்குத் துணை புரிதல்.

# Anak Ayam

Track 19 Lagu
Track 20 Perkusi






**சிந்தனைக்கு**

விரைவான தாளத்தையும் மெதுவான தாளத்தையும் எவ்வாறு கண்டறிவாய்? (KBAT)



1.2.2
1.2.4

ஆசிரியர் குறிப்பு:

- மாணவர்கள் தாளத்தை நன்கு செவிமடுத்தப் பின்னர் இசைக்கத் தூண்டுதல்.
- பல்வகையான தாள இசைக் கருவிகளைப் பயன்படுத்த ஊக்குவித்தல்.



## தொனி அளவு

அழுத்தத்திற்கு ஏற்ப வகைப்படுத்துக.



| | |
|---|---|
| *p* | |
| *mp* | |
| *mf* | |
| *f* | |

நண்பர்களே, இப்பொழுது நீங்கள் காலி கலன்களை நசுக்கி யார் பலசாலி என்பதைக் காட்டுங்கள் பார்ப்போம்?

மாணவர்களே, மேற்காணும் சூழலில் யார் கலனை நசுக்குவதற்கு அதிகமான அழுத்தத்தைக் கொடுத்திருப்பார்கள் என்று கூறுங்கள் பார்ப்போம்?





I.2.3
I.2.4

ஆசிரியர் குறிப்பு:

- கற்ற தொனி அளவை நினைவுபடுத்துதல். *p mp mf f*
- மாணவர்களை வேறு சூழலில் உள்ள தொனி அளவைக் கூறப் பணித்தல்.
- பாடல்களின் வழி தொனி அளவை அறிந்து கூறுதல்.





## தொனி வேறுபாடு


Track 21 Lagu
Track 22 Perkusi

பின்வரும் பாடலைத் தாளத்திற்கு ஏற்ப இசைக்கவும்.
தொனி அளவை இசை வரையீட்டில் கவனிக்கவும்.

### When The Saints






I.2.3
I.2.4


ஆசிரியர் குறிப்பு:


- தொனி அளவு தொடர்பாக மாணவர்களிடம் வினவுதல்.
- பாடிக்கொண்டே தொனி அளவிற்கு ஏற்ப கைத்தட்டுதல்.
- மாணவர்களைத் தொனி அளவிற்கு ஏற்ப இசைக்கத் தூண்டுதல்.

# Anak Ayam

Track 23 Lagu
Track 24 Perkusi






I.2.3
I.2.4



ஆசிரியர் குறிப்பு:

- தொனி அளவு தொடர்பாக மாணவர்களிடம் வினவுதல்.
- பாடிக்கொண்டே தொனி அளவிற்கு ஏற்ப கைகளைத் தட்டுதல்.
- மாணவர்களைத் தொனி அளவிற்கு ஏற்ப இசைக்கத் தூண்டுதல்.



## பயிற்சி 3

**அ. இசைக்கருவிகளுக்கு ஏற்ற தொனி அளவை எழுதுக**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 |  | → | | → |  | = | |
| 2 |  | → | | → |  | = | |
| 3 |  | → | | → |  | = | |
| 4 |  | → | | → |  | = | |
| 5 |  | → | | → |  | = | |

**ஆ. இசைக் கருவிகளை தொனி வகைக்கு ஏற்ப சிந்தனை குறிவரைவில் பட்டியலிடுக.**

தொனி அளவு

| *p* | *mp* | *f* |
|---|---|---|
| ________ | ________ | ________ |
| ________ | ________ | ________ |
| ________ | ________ | ________ |

**இ. ஓர் இன்னிசையை உருவாக்கி அதை மென்மையான தொனியிலும் உரத்த தொனியிலும் இசைத்திடுக.**

______________________________________________

**ஈ. 'தொனி அளவு' மற்றும் 'தாள வேகத்திற்கு' ஏற்ப குழு முறையில் ஒரு திரட்டேட்டை உருவாக்குக.**

______________________________________________

# அலகு 4 இசைக் குடும்பம்

ஆதார சுதி அந்த அன்னை என்பேன்
அதற்கேற்ற லயம் எந்தன் தந்தை என்பேன்
சுருதிலயங்கள் தன்னைச் சுற்றும் ஸ்வரங்கள் எல்லாம்
உறவாக அமைந்த நல்ல இசை குடும்பம்

-(காற்றில் வரும் கீதமே...)




- பாடலின் பொருளை அறிந்து பாடுக.
- இசைக் குடும்பத்தினருடைய தன்மைகளைக் கலந்துரையாடுக.

## பாடுவோம் வாரீர்

Track 25 Lagu
Track 26 Instrumental

### மலேசியா எங்கள் நாடு

நாடு எங்கள் நாடு என்றும்
சொந்த நாடு என்று பாடு x 2

பல்லினங்கள் ஒற்றுமையாய்
பரிணமிக்கும் தாய்வீடு
பண்புதமிழ் சீனமலாய்
பந்தமென திகழ்நாடு
(நாடு எங்கள் நாடு...)

உள்ளிருக்கும் இயற்கைவளம்
உயர்ந்திருக்கும் திருநாடு
உண்மையாக மக்கள்மனம்
உவந்திருக்கும் ஒருநாடு } x 2
(நாடு எங்கள் நாடு...)

பள்ளிகளில் கல்விநலன்
பயிற்றுவிக்கும் பண்பாடு
பக்கத்து நாடுகளும்
பார்த்திருக்கும் வியப்போடு } x 2
(நாடு எங்கள் நாடு...)

வல்லவனாம் நல்லிறைவன்
வாழ்ந்திடும்நல் மலைநாடு
வன்முறைகள் நாமொழித்து
வாழ்ந்திடுவோம் சிறப்போடு
(நாடு எங்கள் நாடு...)





### சிந்தனைக்கு

இப்பாடலில் காணப்படும் ஒலியேற்றம் (crescendo), ஒலித்தணிவு (decrescendo) மற்றும் இன்னிசை ஆகியவற்றை அடையாளம் கண்டு கூறவும்.

1.1.1
1.1.4
1.1.5
1.1.7

ஆசிரியர் குறிப்பு:

- செவிமடுத்த பாடலை ஏற்ற இறக்கத்தோடு பாடத் துணை புரிதல்.
- Cresendo, descrescendo வைப் பற்றி இணையத்தின் துணையுடன் விளக்குதல்.

## நன்றாகப் பாடுவோம்

Track 27 Lagu
Track 28 Instrumental

### மலையழகு!

அந்தி வெயில் வேளையில்
ஆசை உடனே ஒருநாளிலே
அழகிய மலையின் எழில்காணவே } x2
அண்ணனுடனே சென்றேன்

என்னவோர் அழகு
என் கண்ணல்லவோ கனவு } x2
எனதுள்ளம் அடையும் மகிழ்வு
என்னவென்று சொல்வேன்
நான் என்னவென்று சொல்வேன்

ஊற்றாகவே மலையில் பிறந்து
ஊறி வரும் தண்ணீர்த் துளிகள் } x2
பாறைகளின் மீது படர்ந்து விழுந்து
பாய்ந்தோடுவதழகு

என்னவோர் அழகு
என் கண்ணல்லவோ கனவு } x2
எனதுள்ளம் அடையும் மகிழ்வு
என்னவென்று சொல்வேன்
நான் என்னவென்று சொல்வேன்

பச்சைக் கம்பளம் போலவே
பரந்து கிடக்கும் மலைகள் கண்டேன் } x2
இச்சையுடன் அவற்றின் எழிலைக் கண்டு
இன்பமே கொண்டேன்.

என்னவோர் அழகு
என் கண்ணல்லவோ கனவு
எனதுள்ளம் அடையும் மகிழ்வு } x2
என்னவென்று சொல்வேன்
நான் என்னவென்று சொல்வேன்

மலைகளின் மடிமீதிலே
மழலைபோலே சிரிக்கும் மரங்கள்
ஓங்கிய வளர்ந்து நிற்கின்றனறே
ஓவியக் காட்சிபோல

என்னவோர் அழகு
என் கண்ணல்லவோ கனவு
எனதுள்ளம் அடையும் மகிழ்வு } x2
என்னவென்று சொல்வேன்
நான் என்னவென்று சொல்வேன்

பாடகர் இப்பாடலைப் பாடும்பொழுது எந்த இடத்தில் ஒலியேற்றம், ஒலித் தணிவு மற்றும் இன்னிசையைக் கையாண்டுள்ளார் என்று கண்டுபிடித்துக் கூறுங்கள்.



**ஆசிரியர் குறிப்பு:**

1.1.1
1.1.4
1.1.5
1.1.7

- இப்பாடலை ஒலியேற்றம் கிரேசென்டோ (crescendo) மற்றும் ஒலித்தணிவு டிஸ்கிரேண்டோ (decresendo) மற்றும் அழுத்தத்திற்கு ஏற்ப பாடத் தூண்டுதல்.
- பாடலின் பொருள் அறிந்து கூறப் பணித்தல்.
- பாடலில் நன்கு தேர்ச்சி பெற்ற பின்னர் இசையின்றி பாடத் தூண்டுதல்.



## குறியீடும் பொருளும்

Track 29 Tie
Track 30 Slur
Track 31 Fermata
Track 32 Common time

### மாறா சுரப்பிணை (Tie)





**Tie (மாறா சுரப்பிணை)** என்பது சுரவிணை இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட சுரங்களை இணைக்கும் குறியாகும். இரண்டு சுரங்களின் கால அளவை ஒரே வீச்சில் இணைத்துப் பாடுவதாகும்.

### மாறும் சுரவிணை (slur)





**slur (மாறும் சுரவிணை)** என்பது இரு சுரங்களைச் சரளமாக ஒரே மூச்சில் பாடுதலாகும். சுரம் வெவ்வேறு சுதியில் இருக்கும். இரண்டு அல்லது மேற்பட்ட சுரங்களை ஒரே மூச்சில் பாடுதலாகும்.

### இடை நிறுத்தம் (fermata)





fermata **(இடை நிறுத்தம்)** என்பது சிறிது நேரத்திற்கு நிறுத்தி, சுரம் தவறாமல் மீண்டும் பாடுவதாகும். நிறுத்தும் கால அளவு பாடுவோரையும் இசைப்போரையும் வழிநடத்துநரையும் பொறுத்திருக்கும்.

### பொதுத்தாள மாத்திரை (common time)





common time **(பொதுத்தாள மாத்திரை)** என்பது தாள மாத்திரைக்கு ஒப்பாகும். இதன் குறியீடு $\frac{4}{4}$, மேல் நாட்டு புகழிசை, பாப் இசை போன்றவற்றிற்கு இசைக் குறியீடு எழுதப் பயன்படுத்தப்படும்.

4.1.1



ஆசிரியர் குறிப்பு:

- ஒவ்வொரு குறியீட்டை அறிந்து கூறப் பணித்தல்.
- Tie, fermata, slur, commontime ஆகியவற்றை பாடலில் பயன்படுத்தும் முறையைக் கலந்துரையாடுதல்.



# இசைக் குறியீடுகள்

## Do Re Mi





4.1.1

ஆசிரியர் குறிப்பு:

- 4 இசைக் குறியீடு அட்டைகளைத் தயார் செய்தல். அக்குறியீடுகளின் பெயர்களை மாணவர்களிடம் கலந்துரையாடுதல்.
- மாணவர்களை அக்குறியீடுகளின் பெயர்களைக் கூறப் பணித்தல்.
- குறியீடுகளையும் அதன் பொருளையும் கையெழுத்துப் படியில் (manuskrip) எழுதத் தூண்டுதல்.



## குறியீடும் பாடலும்

Track 33 Lagu
Track 34 Perkusi

### Greensleeves







1.1.1
1.1.6
1.1.7
4.1.1

ஆசிரியர் குறிப்பு:

- இசை வரையீட்டில் உள்ள குறியீடு எந்த வகையைச் சார்ந்தது என்று கூறப் பணித்தல்.
- பாடலில் இக்குறியீடுகளைப் பயன்படுத்தும் முறையை விளக்குதல்.

# ஒலியேற்றமும் ஒலித்தணிவும்




ஆசிரியர் குறிப்பு:

I.1.4

- மாணவர்களுக்கு தெரிந்த வேறு பல ஒலியேற்றம் மற்றும் ஒலித்தணிவு ஓசைகளைக் கூறச் செய்தல்.
- ஓசையை வகைப்படுத்தச் செய்தல்.
- ஒலியேற்றம் cresendo மற்றும் ஒலித்தணிவு decrescendo அடங்கிய பாடல்களைப் பாடத் தூண்டுதல்.
- musiks.com youtube எனும் இணையத் தளத்தில் ஒலியேற்றம், ஒலித்தணிவு பாடல்களின் வேறுபாடுகளை அறிந்து கூறச் செய்தல்.

## எங்கும் இசை




- படச் சூழலில் எழும் ஒலியை வகைப்படுத்துக.
- இவ்வொலிகளினால் பிறருக்கு ஏற்படும் விளைவுகளைக் கலந்துரையாடுக.

I.1.5

ஆசிரியர் குறிப்பு:

- செவிமடுத்த ஒலியையும் அதன் அளவையும் கலந்துரையாடுக.
- தொனி அளவு தொடர்பான படத்தை இணையத்திலிருந்து பதிவிறக்கம் செய்து காணப் பணித்தல்.
- மேற்காணும் ஒலியின் அளவை (அழுத்தத்தை) உயர் சிந்தனை அட்டவணையில் தயார் செய்யக் கூறுதல்.

## பாடுவோம் வாரீர்

Track 35 Lagu

### எங்கள் மலை நாடு

உலகம் வியக்கும் எங்க பூமி
வளங்கள் நிறைந்த சொர்ண பூமி
அது எங்க சொந்த பூமி
அது எங்க செல்ல மலை நாடு } x2

மலை நாட்டில் பிறந்த
செல்வங்கள் நாங்க } x2

எங்கள் நாட்டுக்கு என்ன குறை
இங்கு சொல்ல ஒன்றும் இல்ல
இயற்கை அன்னையின்
கடைக்கண்ணாலே
எங்க நாடே செழிக்குதுங்க } x2

மூவினம் ஒன்றாய் கலந்திடுவோம்
முக்கனி போல் பிணைந்திடுவோம்
ஒன்றுகூடி களிப்புடனே
புகழை நாமும் பாடிடுவோம்
தானா... தானா....


மலை நாட்டில் பிறந்த
செல்வங்கள் நாங்க } x2

மதங்கள் பேதங்கள் மொழிகள் மறந்து
ஒன்றாய் கைகள் சேர்ப்போமே
ஒரே மலேசியா முழக்கத்தோடு
வானம் பார்க்க உயர்வோமே...
தானா... தானா....

(உலகம் வியக்கும் எங்க பூமி)

மலை நாட்டில் பிறந்த
செல்வங்கள் நாங்க

சரிபாம கமகாரி சா சா
சரிபாம கமகாரி சா சா
சநி சநி சாரிகாரி மா மா
கமகாரி சரிகா } x2
தந்தானே தானா தானே x 2



ஆசிரியர் குறிப்பு:

I.I.I
I.I.5
I.I.7

- பாடலின் பொருள் அறிந்து இசை வட்டின் துணையுடன் பாடுதல்.
- இசைக் கருவிகளை இசைத்துக் கொண்டே பாடுதல்.
- ஒலியேற்றம் மற்றும் ஒலித்தணிவைப் பாடலில் பயன்படுத்துதல்.




## பயிற்சி 2



### அ. கீழ்க்காணும் அட்டவணையை நிறைவு செய்க.


| குறியீடு | சொல் | பொருள் |
|---|---|---|
| *p* | பியானோ | |
| *mp* | | |
| *f* | | உரத்த ஓசை |
| *mf* | | |

### ஆ. இணைத்திடுக.



tie ( மாறா சுரப்பிணை )

slur ( மாறும் சுரப்பிணை )





fermata ( இடைநிறுத்தம் )

C

common time (பொதுத் தாள மாத்திரை)



### இ. சரியான குறியீட்டிற்கு ( ✓ ) இடுக.

i)  *f*  *p*  *mp*  *mf*

### ஈ. வாக்கியத்திற்கு ஏற்ப சரியான குறியீட்டை வரைக. ( < ) அல்லது ( > )

அ. பள்ளி மணி ஒலிக்கத் தொடங்குகிறது. (      )

ஆ. மழை பெய்து நிற்கப் போகிறது. (      )

இ. இறை வணக்கத்திற்குப் பிறகு மாணவர்கள் வகுப்பறைக்குச் செல்கின்றனர். (      )

# அலகு 5

# இசைப் பாடல்

வண்ண வண்ண சொல்லெடுத்து - இங்கு
வந்தது செந்தமிழ்ப் பாட்டு
வாசமுள்ள மல்லிகைப் போல் மனம்
தந்தது செந்தமிழ்ப் பாட்டு
ஊரு சனம் எல்லாரும் விரும்பும்
இசைதான் என்றும் வாழும்
மனித ஜாதி பாட்டொன்றினால்தான்
கவலை மறக்கும் நாளும்




- பாடலின் வரிகளை அறிந்து பாடுக.
- பாடல் போட்டி வெற்றியாளரின் உணர்வுகளைக் கலந்துரையாடுக.

## முறையாகப் பாடுதல்

நம் நாட்டின் சிறந்த பாடகரைப் நேர்காணல் செய்தல்.



நிருபர் : வணக்கம் ஐயா. தங்களைப் நேர்காணல் செய்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

பாடகர் : மிக்க நன்றி ஐயா.

நிருபர் : ஐயா, நீங்கள் பல பாடல்கள் பாடியுள்ளீர்கள். அனைத்துப் பாடல்களும் சிறந்தப் பாடல்களாகத் தேர்வு செய்யப்பட்டுள்ளன. உங்கள் வெற்றியின் ரகசியம் என்ன ஐயா?

பாடகர் : உண்மையில் என் வெற்றியில் எந்த ரகசியமும் இல்லை. நான், எனக்குக் கொடுக்கப்பட்ட வாய்ப்பை முறையாகப் பயன்படுத்தினேன். பாடும்பொழுது சரியான வழிமுறைகளோடும் சில நுணுக்கங்களைப் பயன்படுத்தியும் பாட வேண்டும்.

நிருபர் : நுணுக்கமாகவும் சரியான முறையோடும் பாடுவது எப்படி என்பதைச் சற்று விளக்குங்கள் ஐயா.

பாடகர் : ஒருவர் பாடும் பொழுது சுதியிலும் தாளத்திலும் கவனம் செலுத்த வேண்டும். மேலும் பாவத்தோடும் அழுத்தத்தோடும் பாட வேண்டும். இதற்கு மிக முக்கியம் குரல் ஒலிப்பு.

நிருபர் : குரல் ஒலிப்பு என்றால் என்ன ஐயா?

பாடகர் : குரல் ஒலிப்பு என்பது குரல் வளை, மூச்சுக் குழாய், அண்ணம், நாக்கு, உதடு போன்ற உறுப்புகளின் மூலம் எழுப்பப்படும் ஓசை. இவ்வோசை குரல் வளையின் அதிர்வினாலும் நாக்கின் அசைவினாலும் மற்ற ஒலி உறுப்புகளினாலும் ஏற்படும். சிறந்த பாடகர் பாடும்பொழுது குரல் ஒலிப்பைப் பயிற்சியின் மூலம் சரிசெய்து முறையாகப் பாடுவார். அதோடு பாடகர் சரளமாகவும் விட்டுவிட்டுப் பாடும் ஆற்றல் கொண்டவராகவும் இருக்க வேண்டும். இந்த யுக்திகளையும் வழிமுறைகளையும் பாடும்பொழுது பயன்படுத்தினால் ஒருவர் சிறந்த பாடகராகத் திகழலாம்.

நிருபர் : ஒருவர் சிறந்த பாடகராகத் திகழ்வதற்குத் தங்களுடைய அனுபவங்களையும் தாங்கள் கையாண்ட உத்திகளையும் பகிர்ந்து கொண்டதற்கு மிக்க நன்றி ஐயா.

பாடகர் : மிக்க நன்றி.

1.1.6

ஆசிரியர் குறிப்பு:

- உரையாடலை வாசித்து அதன் பொருளைக் கலந்துரையாடுதல்.
- குரல் ஒலிப்புத் தொடர்பாகக் கலந்துரையாடுதல்.
- உரையாடலை நடித்துக் காட்டுதல்.

## விட்டுவிட்டுப் பாடுதல், (staccato) சரளமாகப் பாடுதல் (legato).

### வா நண்பா

வா நண்பா எழுந்திடு
தடைகளை உடைத்திடு
தமிழைக் காத்திட
கல்வியில் சிறந்திடு  x2

முயற்சி என்றும் திருவினையாக்கும்
முயன்றுவா நண்பா வெற்றி நிச்சயம்  x2
(வா நண்பா...)

தடைகல்லும் உன் காலில்
வெற்றியின் படிகல்தானே
உன்தடை உடைக்கும் முயற்சியும்
அதுவே வாழ்க்கையின் அடிக்கல்தானே  x2

முயன்றுவா நண்பா வென்றுவா நண்பா
வெற்றி நிச்சயம்
(வா நண்பா...)

இறைவன் உந்தன் பக்கம்
என்று முயற்சி நீயும் கொண்டால்
சோம்பலை தூரம் எறிந்திடு
என்றும் வெற்றி உந்தன் கையில்  x2

முயன்றுவா நண்பா வென்றுவா நண்பா
வெற்றி நிச்சயம்
(வா நண்பா...)

வெற்றி மட்டும் வேண்டாம்
கூடவே நெஞ்சில் பணிவும் வேண்டும்
பணிவு உன்னை எப்போதும்
பிறர் மனதில் வாழ வைக்கும்  x2

முயன்றுவா நண்பா வென்றுவா நண்பா
வெற்றி நிச்சயம்  (வா நண்பா...)

- ஜெசிக்கா டேவிட்

Track 36 Lagu
Track 37 Instrumental




**இணையத் தளம்**

(Staccato)
https://www.youtube.com/watch?v=D0jldmPlmEw

https://www.youtube.com/watch?v=8NPjSKPffaI

1.1.1
1.1.6
1.1.7

ஆசிரியர் குறிப்பு:
- பாடலைப் பின் தொடர்ந்து பாடுதல்.
- தடைஓசை மற்றும் தொடர்ஓசை கூறுகளைப் பாடலில் வலியுறுத்துதல்.
- குழு முறையில் பிரித்துப் பாடத் தூண்டலாம்.



## வருமோ மழை?

ஊர் முழுக்கக் காத்திருக்க
உள்ளங்களும் பதைத்திருக்க
கூரையிலே குறுகி நிற்கும்
குருவியை நான் பார்த்திருக்கேன்
சிட்டுக் குருவியை
நான் பார்த்திருக்கேன் x2

குருவியதும் குறுகி நிற்கும்
காரணத்தை நான் அறிய
கதவ திறந்து வெளிய வந்தேன்
கண்சிமிட்டாம பார்த்திருந்தேன்! x2

ஊர் முழுக்கக்...

திரண்டு நிற்கும் மேகக் கூட்டம்
திட்டுத் திட்டா முட்டிநிற்க
இருண்ட வானில் மின்னல் வெட்டி
இடியின் சத்தமும் கேட்குதம்மா x2

ஊர் முழுக்கக்...


மழைக்குருவி கூட்டம் ஒன்னு
மஞ்ச நீராட காத்திருக்க
ஓடையில தவள யெல்லாம்
ஒய்யாரமா பாட்டிசைக்க

ஊர் முழுக்கக்...

I.3.1
I.3.2

ஆசிரியர் குறிப்பு:

- பாடலை இசை வட்டில் செவிமடுத்து அதற்கேற்ப இயங்கத் தூண்டுதல்.
- எல்லா இயக்கங்களும் தெரிந்தபின் முழுமையாக இயங்கத் தூண்டுதல்.
- இயக்கங்களைப் பரந்த இடத்தில் பாதுகாப்போடு செய்யத் தூண்டுதல்.




தாகம் தீர்க்க வழியில்ல
தொட்டியில் துளி நீரில்ல
தொழுவத்திலே எருமைகளும்
துவண்டு இங்கே போனதம்மா!
ஊர் முழுக்கக்...

வயல்களிலே நீந்திக் குளிக்க
வாஞ்சையோடு வாத்துகளும்
வரிசைப் பிடித்து நின்றதம்மா
வானத்தைப் பார்த்தம்மா!
ஊர் முழுக்கக்...

போன மாசம் இப்படித்தான்
பெய்யுமுன்னு காத்திருந்தோம்
துளிநீரைச் சேர்த்த மேகம்
துளிகூட பொழியலையே!
ஊர் முழுக்கக்...

சொல்லி நானும் முடிக்கவில்லை
சொட்டு சொட்டாய் பெய்ததம்மா
சோகந்தீர்க்க வந்தமழை பின்னர்
சோவென்றே பெய்ததம்மா!
ஊர் முழுக்கக்...

வாடிப் போன செடிகொடிகள்
வளர வழி பிறந்ததம்மா!
விவசாயம் செய்ய மழை
வேண்டும் நீரை தந்ததம்மா!
ஊர் முழுக்கக்...



## பயிற்சி 2

**அ. கீழ்க்காணும் உயர்ச் சிந்தனை (i-Think) அட்டவணையை நிறைவு செய்க.**

குரலிசை ஒலிப்பு

- ஸ்தாகாத்தோ (staccato)
  - ________
- லெகாத்தோ (Legato)
  - சரளமாகப் பாடுதல்

**ஆ. கீழ்க்காணும் படச் சூழலை அடிப்படையாகக் கொண்டு எவ்வகையான நடவடிக்கைகளை மேற்கொள்கிறார்கள் என்பதை இயங்கிக் காட்டுக.**







**இ. இசையைப் பல்வகை கருத்துக் கோடலுக்கு ஏற்ப வகைப்படுத்தலாம். பல நூல்களை மேற்கோள் காட்டி உயர்ச் சிந்தனை தொடர்பான ஒரு திரட்டேட்டைத் தயார் செய்க.**

i. இசை வகை

ii. பண்ணிசைவு

iii. ஒலித் தன்மை

**ஈ. படத்தைக் கண்ணுற்று, தடைஓசை (ஸ்தாகாத்தோ) அல்லது தொடர்ஓசை (லெகாத்தோ) என எழுதுக.**

i)    

# அலகு 6 இசை அறிவு

துளை செல்லும் காற்று
மெல்லிசையாதல் அதிசயம்
குருநாதர் இல்லாத
குயில் பாட்டு அதிசயம்
அதிசயமே அதிசயம்
எல்லாமும் அதிசயம்




- மனிதனின் கைதேர்ந்த முதல் ஊதிசைக்கருவி புல்லாங்குழல் ஆகும்.
- பாடல் வரிகளை உணர்ந்து பாடுக.



# இசைக்குறியீட்டை அறிவோம்; எழுதுவோம்

நிலையம் 1








இக்குறியீடு கோட்டிற்குக் கீழே உள்ளது.




முதல் கோட்டிற்குக் கீழ் உள்ள இசைக் குறியீடு.




முதல் கோட்டிற்கு மேல் உள்ள இசைக் குறியீடு.



முதல் இடைவெளியில் உள்ள இசைக் குறியீடு.



இரண்டாம் கோட்டிற்கு மேல் உள்ள இசைக் குறியீடு.



இரண்டாம் இடைவெளியில் உள்ள குறியீடு.




மூன்றாம் கோட்டிற்கு மேல் உள்ள இசைக் குறியீடு.



மூன்றாம் இடை வெளியில் உள்ள இசைக் குறியீடு.



நான்காம் கோட்டிற்கு மேல் உள்ள இசைக் குறியீடு.







ஆசிரியர் குறிப்பு:

4.1.2

- C மற்றும் D குறியீடுகளை அறிமுகம் செய்தல்.
- இசைக் குறியீட்டில் C குறியீடு மற்றும் D குறியீட்டின் இடத்தை அறிந்து கூறுதல்.
- மாணவர்கள் இசைக் குறியீட்டு அட்டையை நிறைவு செய்யத் துணைபுரிதல்.
- இசைக் குறியீடு தொடர்பான பயிற்சிகளைச் செய்யத் தூண்டுதல்.

## நிலையம் 2






### உனக்குத் தெரியுமா?


| | | | |
|---|---|---|---|
| 1. குவேவர் | : அரையம் | 4. புள்ளி குரோச்சட் | : புள்ளி ஓரி |
| 2. செமிபிரிவ் | : நாலி | 5. குரோச்சட் | : ஓரி |
| 3. மினிம் | : ஈரி | 6. புள்ளி மினிம் | : புள்ளி ஈரி |



4.1.2

ஆசிரியர் குறிப்பு:


- கடந்த ஆண்டுகளில் கற்ற இசைக் குறியீடுகளை நினைவுகூர்தல்.
- இசைக் குறியீடு பயிற்சிகளை இசை வரையீட்டுப் படியில் எழுதுதல்.
- இசைக் குறியீடு தொடர்பான தகவல்களை மாணவர்களுடன் கலந்துரையாடுதல்.




4.1.2

ஆசிரியர் குறிப்பு:

- இசைக் குறியீட்டு அட்டைகளைத் தயார் செய்து மாணவர்களைக் குழு முறையில் அதை நிறைவு செய்யத் தூண்டுதல்.
- விரைவாக நிறைவு செய்த குழுவை வெற்றியாளர்கள் என்று அறிவித்தல்.







**வளப்படுத்துதல்** நீண்ட மதிப்பைக் கொண்ட குறியீட்டிற்கும் குறுகிய மதிப்பைக் கொண்ட குறியீட்டிற்கும் உள்ள வேறுபாடு என்ன?

4.1.2

ஆசிரியர் குறிப்பு:


- இசைக் குறியீடுகளை அட்டையில் தயார் செய்து மாணவர்களை இப்பயிற்சியில் ஈடுபடத் தூண்டுதல்.
- இசைக் குறியீடுகளைக் இசை வரையீட்டுப் படியில் பயிற்சி செய்யத் தூண்டுதல்.

## என்னை நினைவிருக்கின்றதா?




### மாற்றி யோசி

இந்த உயர் சிந்தனை வட்ட வரைவை உங்கள் ஆக்கச் சிந்தனைக்கு ஏற்ப நிறைவு செய்யுங்கள் பார்ப்போம்.




### நடவடிக்கை

- இந்நடவடிக்கையில் மாணவர்கள் குழு முறையில் ஈடுபடுதல்.
- மாணவர்கள் குறியீடு, அதன் மதிப்பு, ஓய்வுக் குறியீடு ஆகியவற்றைக் கூறுதல்.
- ஓர் அட்டவணையில் குறியீடுகளை எழுதுதல்.

4.1.3

ஆசிரியர் குறிப்பு:


- என்னை நினைவிருக்கின்றதா பயிற்சியை மாணவர்களைக் குழு முறையில் செய்யத் தூண்டுதல்.
- மாணவர்களை இசைக் குறியீட்டு வகை மதிப்பு மற்றும் ஓய்வுக் குறியீட்டைக் கூறப் பணித்தல்.
- மாற்றி யோசி (i Think) பயிற்சியைப் பலவகைப்படுத்தி மாணவர்கள் ஆக்கச் சிந்தனையைத் தூண்டுதல்.

## தாள மாத்திரை






தாள மாத்திரைகளை நினைவு கூறுங்கள் பார்ப்போம்.



## குறியீட்டுப் பெட்டி

1. பல்வகையான இசைக் குறியீடுகளைத் தயார் செய்யவும்.




2. இசைக் குறியீடுகளை அட்டைப் பெட்டியில் போடவும்.

3. இசை ஒலித்தவுடன் இசைக் குறியீடுகள் கொண்ட பெட்டியை ஒவ்வொருவரிடமாக நகர்த்தவும். இசை நிறுத்தியவுடன் பெட்டியைப் பிடித்து கொண்டிருப்பவர் ஓர் இசைக் குறியீட்டை எடுப்பார்.



4. மாணவர்கள் தாள மாத்திரைக்கு ஏற்ப தாள அமைப்பை உருவாக்குதல்.



ஆசிரியர் குறிப்பு:

4.1.4

- மாணவர்கள் தாள மாத்திரையின் பொருளைக் கூறப் பணித்தல்.
- இசைக் குறியீட்டு விளையாட்டிற்குப் பல்வகை தாள அமைப்பு கொண்ட அட்டையைத் தயார் செய்தல்.
- இசைக் குறியீட்டு வகைகளை இசை வரையீட்டுப் படியில் எழுதத் தூண்டுதல்.


## குறுக்கெழுத்து

### இடமிருந்து வலம்

1. 3 மதிப்பு கொண்ட சுரக் குறியீடு
2. Staccato தமிழில்
3. 2 ♪ கொண்ட சுரக் குறியீடு
4. நீண்ட கால அளவைக் கொண்ட குறியீடு
5. மிகக் குறுகிய கால அளவைக் கொண்ட குறியீடு

### மேலிருந்து கீழ்

1. 1½ மதிப்பிற்கு ஏற்ற இசைக் குறியீடு
2. 2 ♩ கொண்ட சுரக் குறியீடு
3. Legato தமிழில்
4. ▬ குறியீட்டின் பொருள்
5. $\frac{2}{4}$ $\frac{3}{4}$ $\frac{4}{4}$ இசைக்குறியீடுகளின் பொருள்




**விடைகள்**

நாலி, புள்ளி ஈ.ரி, ஓய்வுக்குறியீடு, ஓரி, தாள மாத்திரை, ஈ.ரி, தடையோசை, அரையம், புள்ளி ஓரி, தொடரோசை


4.1.2
4.1.3
4.1.4


**ஆசிரியர் குறிப்பு:**

- மாணவர்கள் குறுக்கெழுத்துப் போட்டியை நிறைவு செய்ய ஆசிரியர் வழிகாட்டுதல்.
- கொடுக்கப்பட்ட விடைகளைக் கொண்டு சரிபார்த்தல்.




## சுரம் வாசிப்போம்




D - சுரம் போன்று துளையை மூடிக் கொள்ளவும். வலது கையால் 6 ஆவது துளையை மூடவும். (மோதிர விரல்) **து** - என்று ஊதவும்.




C - சுரம் போன்று துவாரத்தை மூடிக் கொள்ளவும். வலது கையால் 2 ஆவது துளையை மூடவும். (சுண்டு விரலால்) **து** என்று ஊதவும்.



ஆசிரியர் குறிப்பு:

1.4.1
1.4.5

- மாணவர்கள் கற்ற E, F, G, A, B, C’ மற்றும் D’ சுரங்களை நினைவு கூர்தல்.
- C மற்றும் D சுரத்தை முறையாக வாசிக்கப் பயிற்சி அளித்தல்.
- முறையாக வாசிக்கும் ஒலி நாடாக்களை ஒலிபரப்பி பயிற்சி அளித்தல்.
- சரியான உடல் அமர்வையும் கையமர்வையும் கவனத்தில் கொள்ளல் வேண்டும்.



## பயிற்சி செய்வோம் வாருங்கள்

### நடவடிக்கை 1

B, A & G சுரங்கள்


Track 42 Latihan Rekorder



### நடவடிக்கை 2

B, A, G, C' & D' சுரங்கள்


Track 43 Latihan Rekorder



### நடவடிக்கை 3

B, A, G, C', D' & E சுரங்கள்


Track 44 Latihan Rekorder



### நடவடிக்கை 4

G, C', D', E & F சுரங்கள்

Track 45 Latihan Rekorder



### நடவடிக்கை 5

B, A, G, C', D', E & F சுரங்கள்

Track 46 Latihan Rekorder






1.4.1
1.4.5

ஆசிரியர் குறிப்பு:

- ஆசிரியரின் துணையுடன் மாணவர்கள் வாசித்தல்.
- நன்கு பயிற்சி பெற்ற பின் சுரங்களைத் தனியாள் முறையில் வாசிக்கத் தூண்டுதல்.
- சரியான மூச்சுப் பயிற்சி மற்றும் நாப்பயிற்சியைச் செய்யத் தூண்டுதல்.

## நடவடிக்கை 6 — C சுரம்

Track 47 Latihan Rekorder




## நடவடிக்கை 7 — D சுரம்

Track 48 Latihan Rekorder




## நடவடிக்கை 8 — C & D சுரங்கள்


Track 49 Latihan Rekorder



## நடவடிக்கை 9 — E, F, C & D சுரங்கள்

Track 50 Latihan Rekorder








1.4.1
1.4.5

**ஆசிரியர் குறிப்பு:**

- மாணவர்கள் C சுரத்தையும் D சுரத்தையும் நன்கு பயிற்சி செய்யத் தூண்ட வேண்டும்.
- சரியான உடல் அமர்வோடு இசைப்பதை உறுதிப்படுத்தவும்.



## வளப்படுத்தும் பயிற்சி

Track 51 Latihan Rekorder

### நடவடிக்கை 10


### Six Little Ducks




### நடவடிக்கை 11

### A Ram Sam Sam

Track 52 Latihan Rekorder




1.4.1
1.4.5



ஆசிரியர் குறிப்பு:

- முதலில் கையமர்வுப் பயிற்சி செய்தல் வேண்டும்.
- நன்றாகப் பயின்ற பின் பாடலை இசைக்கத் தூண்டுதல்.




## இசைத் தொடர் வாசிப்போம் - ரெக்கோடர்



உங்களுக்குத் தெரியுமா?
பல இசைக் குறியீடுகள் சேர்ந்து ஒரு பாடலை அல்லது முழு மெட்டை உருவாக்கும். இசை வரையீட்டில் இசைத் தொடரை ⌒ என்று எழுதுவர்.


### நடவடிக்கை 12


Track 53 Latihan Frasa 1




### நடவடிக்கை 13

Track 54 Latihan Frasa 2









1.4.2
1.4.5


ஆசிரியர் குறிப்பு:

- இசைக் குறியீடுகளுக்கு ஏற்ப இசைக்க பயிற்சி செய்தல்.
- இசை பின்னணியோடு வாசித்தல்.
- உடல் அமர்வையும் கையமர்வையும் சரியான ஊதல் நுட்பத்தையும் எப்பொழுதும் கவனத்தில் கொள்ளல் வேண்டும்.




## வாசிப்பதை வளப்படுத்துவோம்

ரெக்கோடரில் பயிற்சி செய்யவும்



## Six Little Ducks

Track 55 Latihan Rekorder






1.4.2
1.4.5

ஆசிரியர் குறிப்பு:


- முதலில் ஒவ்வொரு தொடராக இசைக்கத் தூண்டுதல். பின் முழுப் பாடலையும் இசைக்கத் தூண்டுதல்.
- வாசிக்கும் பொழுது சரியான உடல் அமர்வை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.




# இன்னிசை ரெக்கோடர்

Track 56 Latihan Rekorder

முதன்மை மெட்டு 1




பின்தொடர் மெட்டு 1



முதன்மை மெட்டு 2



பின்தொடர் மெட்டு 2



**தகவல்**

உங்கள் ரெக்கோடர் வாசிக்கும் திறனை வலுப்படுத்துவதற்கு அதிகப் பயிற்சிகள் தேவை.

1.4.2
1.4.5



ஆசிரியர் குறிப்பு:

- இசைப்பதற்கு முன் மாணவர்களை 'து' என்று உச்சரிக்கத் தூண்டுதல்.
- கையமர்வு பயிற்சியோடு ஒவ்வொரு சுரக் குறியீட்டையும் வாசிக்கத் தூண்டுதல்.



## இன்னிசை மற்றும் பண்ணிசையை வாசிப்போம்

### Ode To Joy

Track 57 Latihan Rekorder




**நினைவில் கொள்க**

இசை வரையீட்டில் சுரங்கள் எழுதுவதைத் தவிர்க்கவும்.

1.4.2
1.4.5



ஆசிரியர் குறிப்பு:


- பாடலை இசைப்பதற்கு முன் கைதட்டி பாடத் தூண்டுதல்.
- இன்னிசையைச் சரியாக வாசிப்பதை உறுதிப்படுத்தவும்.

## பல்வகை நடை - ரெக்கோடர்



நடவடிக்கை 11

### A Ram Sam Sam




**நினைவில் கொள்க**

மெட்டின் நடை வேகமாகவும் மெதுவாகவும் இருக்கும். பாடும் பொழுது இம்முறையைக் கருத்தில் கொள்ளவும்.

I.4.3
I.4.5

ஆசிரியர் குறிப்பு:

- மெட்டை இசைப்பதற்கு முன் தாளத்தைக் கைதட்டி பயிற்சி செய்தல்.
- கையமர்வு பயிற்சிக்குப் பின் ரெக்கோடரை இசைக்கத் தூண்டுதல்.
- மாணவர்களைத் தாள வகைக்கு ஏற்ப இசைக்கத் தூண்டுதல்.



## பயிற்சி 5

அ. கீழ்க்காணும் அட்டவணையை நிறைவு செய்க.

| | | இசைக் குறியீட்டின் எண்ணிக்கை மதிப்பு | இசைக் குறியீட்டுச் சின்னம் | ஓய்வுக் குறியீடு |
|---|---|---|---|---|
| i) | ♩ + ♩ | | | |
| ii) | 𝅗𝅥. + ♩ | | | |
| iii) | ♪ + ♪ | | | |
| iv) | ♩. + ♪ + ♩ | | | |

ஆ. கட்டத்தில் உள்ள இசைக் குறியீட்டிற்கு ஏற்ப இசைக் குறியீட்டு மதிப்பிற்கு வண்ணம் தீட்டுக.

| | இசைக் குறியீடு | இசைக் குறியீட்டு மதிப்பு | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| i) | 𝅝 எ.கா | | | | | | | | |
| ii) | 𝅗𝅥. | | | | | | | | |
| iii) | 𝅗𝅥 | | | | | | | | |
| iii) | ♩ | | | | | | | | |
| iv) | ♩. | | | | | | | | |
| v) | ♪ | | | | | | | | |

**திறவி**

▨ = 1/2


▭▭ = 1

இ. தாள அமைப்பைச் சரியான தாள மாத்திரையுடன் இணைத்திடுக. தாள மாத்திரையை விளக்கி எழுதுக.

| | |
|---|---|
| i. ♩ ♩ ♩ | 2/4 |
| ii. ♩ ♩ ♩ ♩ | 3/4 |
| iii. ♩ ♩ | 4/4 |

# அலகு 7


## தாள இசை




- பாடலின் வரிகளை அறிந்து பாடுக.
- படத்தில் மாணவர்களின் இயக்கங்களைக் கலந்துரையாடுக.



## இயக்காற்றல் ஒலி




### நடவடிக்கை

படத்தில் காணப்படும் விலங்குகளின் ஒலி அழுத்தத்தைக் கலந்துரையாடி, அவை எழுப்பும் ஒலிகளை உயர்சிந்தனை அட்டவணையில் வகைப்படுத்துக.

**Dinamik**

| *p* | *mp* | *mf* | *f* |
|---|---|---|---|
| ____ | ____ | ____ | ____ |
| ____ | ____ | ____ | ____ |

மேற்காணும் விலங்குகளை அறிந்து அவை எழுப்பும் ஒலிக்கேற்ற சரியான இயக்காற்றலைக் கூறுக.





1.4.4


ஆசிரியர் குறிப்பு:

- மாணவர்களைக் குழுவாரியாகப் பிரித்து விலங்கினங்களின் ஒலிகளை எழுப்பச் செய்தல்.
- விலங்குகளின் ஒலியை இயக்காற்றலுக்கு ஏற்ப உயர்தர சிந்தனையில் வகைப்படுத்துதல்.




## இயக்காற்றல் - ரெக்கோடர்


### இன்னிசை பாடிவரும்



### நடவடிக்கை

Track 58 Dinamk






### வளப்படுத்துதல்

விரைவாக -Allegro - மெதுவாக (Andarte) வின் பொருளை விளக்குக.



ஆசிரியர் குறிப்பு:


1.4.4
1.4.5

- மாணவர்களை சுரங்கள், வரிகள் மற்றும் இயக்காற்றல் ஆகியவற்றை அறிந்து கூறப் பணித்தல்.
- ஒலி வட்டைக் கேட்டல். அதில் வரும் இராகம், சுரங்கள், வரிகள் மற்றும் இயக்காற்றலைக் கூறப் பணித்தல்.
- இயக்காற்றலுக்கு ஏற்ப ரெக்கோடரை இசைக்கத் தூண்டுதல்.




## தாள அமைப்பை உருவாக்குவோம்


1. மாணவர்களை 4 குழுக்களாகப் பிரித்தல். ஒவ்வொரு குழுவிற்கும் சொல் அட்டை, குறியீட்டு அட்டை மற்றும் ஓய்வுக் குறியீடு அட்டைகளைக் கொடுத்தல்.




2. ஆசிரியர் தாள மாத்திரை அட்டைகளை வகுப்பில் காண்பித்தல்.




3. மாணவர்கள் அவர்களது ஆக்கச் சிந்தனைக்கு ஏற்ப தாள அமைப்பை உருவாக்குதல்.



4. தாள அமைப்பை உருவாக்கியபின் குழு முறையில் தாளத்திற்கு ஏற்ப கைகளைத் தட்டுதல். எந்தக் குழு கைகளைத் தட்ட இயலவில்லையோ அக்குழு விளையாட்டிலிருந்து நீக்கப்படும்.




5. இவ்விளையாட்டைத் தொடர்ந்து விளையாடுதல். சரியாகக் கைத்தட்டிய குழுவிற்குப் புள்ளிகள் வழங்குதல்.



2.1.2




ஆசிரியர் குறிப்பு:

- தாள மாத்திரை $\frac{2}{4}$ $\frac{3}{4}$ $\frac{4}{4}$ க்கு ஏற்ப தாள அமைப்பை உருவாக்கப் பயிற்றுவித்தல்.
- இவ்விளையாட்டிற்கான துணைப் பொருள்களை ஆசிரியர் தயார் செய்து மாணவர்களை விளையாட்டில் ஈடுபடத் தூண்டுதல்.
- உருவாக்கிய தாள அமைப்புகளையும் தாள மாத்திரைகளையும் இசை வரையீட்டுப் படியில் எழுதப் பணித்தல்.



## காதில் ஒலி







**விளையாடும் முறை**

1. மாணவர்களை இரு குழுக்களாகப் பிரித்தல்.
2. சுர வரிசையில் 2 மெட்டுகளைக் சுரப்படுத்துதல்.
3. மெட்டைக் குழுத் தலைவனின் காதில் முணுமுணுத்தல்.
4. குழுத் தலைவன் மெட்டைப் பயிற்சி செய்ய நேரம் வழங்குதல்.
5. குழுத் தலைவன் தன் அருகில் உள்ள உறுப்பினரிடம் மெட்டை இரகசியமாக முணுமுணுத்தல்.
6. மெட்டை இறுதி உறுப்பினர் வரை முணுமுணுப்பர்.
7. இறுதி உறுப்பினர் தம்மிடம் கூறிய மெட்டை வேகமாக ஒலிப்பார்.
8. ஒலித்த மெட்டு சரியா என்று குழுத் தலைவன் உறுதி செய்வார். பிழையாக இருப்பின் திருத்துவார்.
9. இவ்விளையாட்டை பல்வகை மெட்டுக்கு ஏற்ப விளையாடலாம்.

2.1.3



ஆசிரியர் குறிப்பு:

- இவ்விளையாட்டைக் குழு முறையில் விளையாடப் பணித்தல்.
- மாணவர்கள் சுர மெட்டுகளைச் சரியான சுதியில் பாடத்துணைபுரிதல்.




## சொன்னதைச் சொல்

**முடிந்தால் என்னைப் போல் கூறுங்கள் பார்ப்போம்.**



மாற்றுகை (Improvisasi) என்பது சொன்னதைத் தாளம் மாறாமல் அப்படியே மெட்டுக்கு ஏற்ப மாற்றியமைத்தல். நான் சொன்னதைக் கூறத் தயாரா?






2.1.3

ஆசிரியர் குறிப்பு:

- ஒவ்வொரு மாணவரும் வழங்கப்பட்ட மெட்டை மாற்றியமைத்து பாடப் பணித்தல்.
- மாற்றி அமைக்கப்பட்ட மெட்டை Do சுரத்திலிருந்து தொடங்கப் பணித்தல்.
- மாணவர்கள் அசைந்து கொண்டே மெட்டுகளைப் பாடத் தூண்டுதல்.




## பயிற்சி 7





அ. மேற்காணும் குறியீடுகளைப் பயன்படுத்தி கீழ்க்காணும் தாள மாத்திரைகளுக்கு ஏற்ற தாள அமைப்புகளை உருவாக்குக.


i) $\frac{2}{4}$ ii) $\frac{3}{4}$ iii) $\frac{4}{4}$

ஆ. கீழ்க்காணும் தாள அமைப்புகளுக்கு ஏற்ப தாள மாத்திரைகளை எழுதுக.

i)


ii)


iii)





இ. கீழ்க்காணும் இசை வரையீட்டை ரெக்கோடரில் இசைத்திடுக.

i)



ii)



iii)


# அலகு 8

## பன்னாட்டிசை விழா

கண்கவர் காட்சிகள்!
இசை தோரணங்கள்!
இதயத்தின் புல்லரிப்பு
முணுமுணுக்கும் கீத நாதம்

நம் நாட்டில் நடைபெறுகின்ற பன்னாட்டு இசை விழாவிற்கு உங்களை அழைக்கின்றோம்.




- இசை விழாவில் இடம் பெற்றுள்ள இசைக் கருவிகளைக் கூறுக.
- இசை விழா சூழலைக் கலந்துரையாடுக.



## எங்கள் இசைக் கருவிகள்


நாங்கள் எங்கள் சுற்றுச் சூழலில் உள்ள பொருட்களைக் கொண்டு இசைக் கருவிகளை உருவாக்கியுள்ளோம்.




நெகிழி மற்றும் கலன்களைக் கொண்டு முழவு இசை எழுப்புதல்.



சிறிய பெரிய கலன்களை வரிசையாக அடுக்கி சாக்லெம்போங் (caklempong) இசை எழுப்புதல்.



பிரம்பில் நொய்வ வளையத்தைக் கட்டி கீத்தார் இசை எழுப்புதல்.



கரண்டிகளைப் பெரிதும் சிறிதுமாகக் கலந்து தொங்கவிட்டு மணி இசை எழுப்புதல்.



ஆசிரியர் குறிப்பு:

2.1.1

- இசைக் கருவிகளைத் தயாரிக்க மாணவர்களைச் சுற்றுச் சூழலில் உள்ள மறுபயனீட்டுப் பொருள்களைக் கொண்டுவரப் பணித்தல்.
- மறுபயனீட்டுப் பொருள்களைக் கொண்டு என்னென்ன இசைக் கருவிகளை உருவாக்கலாம் என்று கலந்துரையாடுதல். பாடலுக்கு ஏற்ற இசைக் கருவிகளை உருவாக்க ஊக்குவித்தல்.




துறவி ஒருவர் அரசருக்கு வரம் கொடுத்தார். "இன்று முதல் பறவைகளும், விலங்குகளும் என்ன பேசினாலும் உனக்குக் கேட்கும். இதை நீ யாரிடம் கூறினாலும் உன் தலை வெடித்து இறந்துவிடுவாய்" என்றார். வழியில் விலங்குகள் பறவைகள் பேசிக் கொள்வது அவருக்குத் தெளிவாகக் கேட்டது. தனக்குக் கிடைத்த ஆற்றலை எண்ணி மகிழ்ந்தார்.






இரவில், அரசரும் அரசியும் சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது சிறிதளவு தேனும் ஓர் உருண்டை சோறும் தவறித் தரையில் விழுந்தன. அங்கிருந்த எறும்பு ஒன்று, "ஓடி வாருங்கள், அரண்மனை மதுக் குடம் உடைந்து தேன் வெள்ளமாகப் பாய்கிறது. பெருஞ்சோற்று மலையே நமக்காகக் கிடக்கிறது" என்று தன் கூட்டத்தை அழைத்தது. இதைக் கேட்ட அரசருக்குச் சிரிப்பை அடக்க முடியவில்லை. தன்னை மறந்து கலகலவென்று சிரித்தார்.

"ஏன் சிரிக்கிறீர்கள்" என்று கேட்டார் அரசி. "ஒன்றும் இல்லை" என்று மழுப்பினார் அரசர். "உண்மையைச் சொல்லுங்கள், என்னிடம் எதையோ மறைக்கிறீர்கள்? நீங்கள் சொல்லாவிட்டால் நான் இனிமேல் உங்களுடன் பேச மாட்டேன்" என்று கோபத்துடன் சொன்னார் அரசி. "உண்மையைச் சொன்னால் என் உயிர் போய்விடும்" என்றார் அரசர்.

“அதெல்லாம் எனக்குத் தெரியாது; நீங்கள் சொல்லியே ஆக வேண்டும்” என்று அடம்பிடித்தார் அரசி. உண்மையைச் சொன்னால் இறந்துவிடுவேன் என்ற சோகத்தில் இருந்தார் அரசர். வளர்ப்பு நாயும் சோகமாக இருந்தது.

சற்று தூரத்தில் அரண்மனைச் சேவல், பெட்டைக் கோழிகள் சூழ ஆரவாரமாக உலாவிக் கொண்டிருந்தது. இதைப் பார்த்த நாய் கோபத்துடன்,




நாயும் சேவலும் பேசிக் கொண்டிருந்ததை அரசர் கேட்டார். அதன்படியே அரசியிடம், “நீ முதலில் சவுக்கால் நூறு அடி பெற வேண்டும்; அதன் பிறகு உண்மையைச் சொல்கிறேன்“ என்றார். “ஐயோ! சவுக்கடியும் வேண்டாம், உங்கள் உண்மையும் வேண்டாம் என்னை விட்டுவிடுங்கள்” என்றார் அரசி. அன்றிலிருந்து அரசர் எந்தச் சிக்கலும் இல்லாமல் மகிழ்ச்சியாக வாழ்ந்தார்.



2.1.1
3.1.1

ஆசிரியர் குறிப்பு:

- கதையில் வரும் நீதியைக் கூறச் செய்தல்.
- கதையில் என்னென்ன ஓசைகள் உருவாகின்றன என்பதைக் கலந்துரையாடுக.
- கதையை பாவனையோடும் இசையோடும் நடித்துக் காட்டுதல்.

## கதைப் பாட்டு

Track 59 Lagu
Track 60 Instrumental

### என்ன ஆகும்?

(ஆண்)
கேள்வி கேட்க போறேன்
பதில் என்ன நீ சொல்லு தோழி
அ.. ஆ..
என் கேள்விகேற்ற பதிலை
நீ சரியாக சொல்லு தோழி
அ.. ஆ..

(பெண்)
கேள்வி கேட்க போறேன் பதில்
என்ன நீயும் சொல்லு தோழா
அ.. ஆ..
என் கேள்விகேற்ற பதிலை
நீ சரியாக சொல்லு தோழா

(பெண்)
பள்ளிக்கூடம் நீயும் சென்று
பாடம் பலவும் படிக்கலன்னா
தோழா என்ன ஆகும்? - சொல்
தோழா என்ன ஆகும்? (x2)

(ஆண்)
ஏழ்மை என்னைத் தாக்கும்
என்வாழ்வும் வீணா போகும்
ஏற்றம் தரும் பாதை
என்னை விட்டு விலகும் (x2)



(ஆண்)
பெற்றவரின் பேச்சை நாமும்
பொறுமையுடன் கேட்கலேன்னா
தோழி என்ன ஆகும்? - சொல்
தோழி என்ன ஆகும்? (x2)

(பெண்)
கல்வி கற்றும் மூடனாய்
கண்ணிருந்தும் குருடனாய்
வாழ்வும் நிலை மாறும்
வாழ்க்கையும் தடம் மாறும் (x2)

(பெண்)
பண்பில்லாத நண்பருடன்
பழக்கம் உனக்கு இருந்ததுன்னா
தோழா என்ன ஆகும்? - சொல்
தோழா என்ன ஆகும்? (x2)

(பெண்)
எண்ணம் சிதைந்து போகும்
என் இலக்கும் மாறிப் போகும்
தேவை இல்லாச் சிக்கலுமே
தேடி என்னைச் சேரும் (x2)

(ஆண்)
கால நேரத்தோடு
காரியம் செய்யலென்ன
தோழி என்ன ஆகும் - சொல்
தோழி என்ன ஆகும்?

(பெண்)
காலத்தோட அருமையை
கருத்தில் கொள்ளலேன்னா
கையை விட்டுப் போகும்
கிடைக்கும் வாய்ப்புகள் யாவும்

**வளப்படுத்துதல்**


இப்பாடலின் கருத்தைக் கலந்துரையாடுக.
பாடலைப் பாடிக் கொண்டே இசைக் கருவிகளை இசைத்திடுக.

1.1.1
2.1.1
3.1.1

ஆசிரியர் குறிப்பு:

- பாடலின் பொருளை அறிந்து கூறுதல்.
- பாடலுக்கு ஏற்ப இசைக் கருவிகளை இசைக்கச் செய்தல்.

ஓணான் ஓணான் மணி எத்தனை?




**விளையாடும் முறை**

மாணவர்கள் இரு குழுக்களாக இருப்பர். (குழு A குழு B)

முதலில் குழு A கடிகார முள்ளைச் சுழற்றுவர். முள் எந்த எண்ணில் நிற்கிறதோ அந்த மெட்டைப் பாடுவர்.

சரியாகப் பாடினால் 10 புள்ளிகள். பிழையாகப் பாடினால் புள்ளிகள் இல்லை.

குழு A: ஓணான் ஓணான் மணி எத்தனை?

குழு B: மணியைச் சொல்லிய பிறகு மெட்டைப் பாடுவர்.


தோல்வியடைந்த குழுவினர் எல்லா மெட்டுக்களையும் மீண்டும் பாடுவர்.

1. So La So Mi
2. Mi Mi So Re
3. Re Ri So Fa
4. So Mi Do Re
5. Do Re Mi So
6. La So Fa So
7. Mi Mi Re Do
8. Fa So La So
9. Mi Re Do Re
10. So Fa Mi Re
11. Fa La So Re
12. Fa So Fa Mi



## மெட்டுக்கு மெட்டு

| குழு | புள்ளிகள் | மொத்தம் |
|---|---|---|
| குழு A: | | |
| குழு B: | | |






வெற்றி பெற்ற குழு புதிய மெட்டை உருவாக்குதல்.

2.1.3

ஆசிரியர் குறிப்பு:

- ஒலிவட்டில் ஒலிபரப்பப்படும் மெட்டை மாணவர்கள் பாடப் பணித்தல்.
- மாணவர்களைத் தாமாக மெட்டை உருவாக்க ஊக்குவித்தல்.
- ஆசிரியர் மாணவர்களின் தவறுகளைச் சுட்டிக் காட்டி திருத்துதல்.

## கொம்பாங் இசை

மலாய் இனத்தவர்களின் பாரம்பரிய இசைகளில் ஒன்று கொம்பாங் இசையாகும். இவ்விசை அரபு நாட்டிலிருந்து மலாக்கா மன்னராட்சி காலத்தில் இங்கு தருவிக்கப்பட்டது.

இக்கருவியில் இரண்டு பகுதிகள் உள்ளன.

- முகம் - தோல் பகுதி பெலுலாங் (Belulang) என்று அழைப்பர்.
- உடல் - பிரம்புப் பகுதி பாலோ (Baluh) என்று அழைப்பர்.

➡ மலாய்க்காரர்களின் திருமண நிகழ்வுகளிலும் பண்பாட்டு நிகழ்ச்சிகளிலும் இக்கருவி இசைக்கப்படும்.

Track 61 Kompang





3.1.1

ஆசிரியர் குறிப்பு:

- கொம்பாங் இசை தொடர்பான தகவலைத் தேடுதல்.
- கொம்பாங் இசையை செவிமடுத்தல். பின் அதே போன்று இசைக்கத் தூண்டுதல்.



# கொம்பாங் இசைப்போம்

## கொம்பாங் இசைக்கும் எளிய முறை

**படி 1** பிடிக்கும் முறை



மேல்



கீழ்

**படி 2** இசைக்கும் முறை



(நடுவில் அறைதல்) எழும் ஓசை; **(பாக்)**




(ஓரத்தில் தட்டுதல்) எழும் ஓசை; **(புங்)**

### இன்னிசைக்கு ஏற்ப இசை எழுப்புதல்

- $\frac{3}{4}$ P P P / P P P / P P P / P P B
- $\frac{4}{4}$ P P P B / P P P B
- $\frac{2}{4}$ P B / P B / P B / P B
- $\frac{3}{4}$ P P B / P P B / P P B
- $\frac{4}{4}$ P P P B / P P P B
- $\frac{3}{4}$ P P P / P P B / P P P
- $\frac{2}{4}$ B P / B P / B P / B P

குறிப்பு :

P = 

B = 




**இணையத் தளம்**

(kompang) என்று தட்டச்சு செய்து பார்க்கவும்



3.1.1

ஆசிரியர் குறிப்பு:

- கொம்பாங் இசையை முறையாக இசைக்கத் தூண்டுதல்.
- இணையத்தில் கொம்பாங் இசை தொடர்பான தகவலைத் தேடப் பணித்தல்.

Track 62 Nadaswaram

## நாதசுர மேளக் கச்சேரி

நாதசுர மேளம் தமிழர்களின் பாரம்பரிய இசை. இவ்விசையை 'இராஜ இசை' என்றும் கூறுவர். இக்கருவிகள் மங்கள ஒலியை எழுப்பும். அதன் ஒலியின் வசீகரம் கேட்போர் அனைவரையும் முதல் தீண்டலிலேயே அடிமையாக்கிவிடும். ஆகவேதான் இசை அறியாதவர்கூட நாதசுர மேளம் கேட்பதில் உற்சாகம் காட்டுவர். தமிழர்களின் சமய நிகழ்வுகளிலும் திருமண வைபவங்களிலும் இவ்விசை இசைப்பது வழக்கம். நாதசுவர மேளம் இசையென்றால் நம் நினைவுக்கு வருவது 'தில்லானா மோகனம்பாள்' திரைப்படம்தான்.



### தகவல்

நாதசுர இசையில் மிக புகழ்பெற்ற இராசரத்தினம் பிள்ளை அவர்களைப் பற்றிக் கலந்துரையாடுக



**இணையத் தளம்**

https://www.youtube.com/watch?v=qz4LLwC5YF8

3.1.1

ஆசிரியர் குறிப்பு:

- நாதசுர தொடர்பான தகவலை இணையத்தில் தேடப் பணித்தல்.
- நாதசுர கருவிகள் எதிலிருந்து செய்யப்படுகிறது என்று கலந்துரையாடுக.

Track 63 Concerto

## கோன்செர்தோ



கொன்செர்தோ (concerto) இசை, குழு முறையில் வாசிக்கப்படும். இவ்விசை ஓர் முதன்மை இசைக்கருவிக்குப் பின்னணியாக இசைக்கப்படும். பியானோ இசைக்கருவிக்குப் பின்னணியாக இசைக்குழு (orchestra) இசைக்கப்படுவதை பியானோ கொன்செர்தோ (piano concerto) என்பர். இதைப் போலவே கிளாரினெட் கொன்செர்தோ, வயலின் கொன்செர்தோ என கொன்செர்தோவை பல்வகைப் படுத்தலாம்.





WOLFGANG

இவர் ஆஸ்திரியாவில் பிறந்தவர்.
சிறந்த இசையமைப்பாளர்
8 வயதில் மெட்டை உருவாக்கியவர்
இதுவரை எண்ணிலடங்கா கோன்செர்தோ பியானோ இசை மெட்டுகளை உருவாக்கியுள்ளார்.

3.1.1


ஆசிரியர் குறிப்பு:

- கோன்செர்தோ பியானோ தொடர்பான தகவலை இணையத்தில் தேடத் துணை புரிதல்.
- கலைஞர்கள் இசைக்கும் இசைக் கருவிகளையும் இசைக்கும் முறையையும் கலந்துரையாடுதல்.

# புகழிசை

Track 64 K-Pop

பிரபல இசை அல்லது புகழிசை மக்களைத் தேடிச் செல்லும் இசை. இது இயல்பாக வரையறுக்கப்பட்ட மக்கள் இசையாகும்.



கே போப் அல்லது கொரியன் போப், தென் கொரியாவில் உருவான ஒரு பிரபல இசையாகும். இவ்விசை ஹிப் ஹாப், ராக், போப், ஆர் என் பி ஆகிய இசை வகைகளின் கலவையாகும்.

கே போப் இசை இளைஞர்களின் கிளை கலாச்சாரமாக உருவெடுத்துள்ளது. பாடகர்கள் மற்றும் இசையமைப்பாளர்களின் உடையும் பாணியும் இளைஞர்களைக் கவர்ந்துள்ளன.

## தகவல்

தமிழில் ராப் இசையைச் சொல்லிசை எனலாம். சொற்களை கோவையாக தாளத்துடன் பாடுவதால் இவ்வாறு கூறப்படுகின்றது. தமிழ் இலக்கியத்தில் சொல்லிசை இடம் பெற்றுள்ளது. -கலிங்கத்துபரணி - கந்தரநுபூதி

3.1.1

ஆசிரியர் குறிப்பு:

- கே போப் இசை தொடர்பான தகவலை இணையத்தில் தேடத் துணை புரிதல்.
- கே போப் தொடர்பான பாடலைக் கேட்கச் செய்தல்.
- தமிழ் ராக் பாடல்கள் தொடர்பாகக் கலந்துரையாடுதல்.

## பயிற்சி 8

**அ. கீழ்க்காணும் இசைக் கருவிகளின் பெயர்களைப் பெயரிடுக.**

i) 

ii) 

iii) 

**ஆ. கீழ்க்காணும் வாக்கியங்களை வாசித்து (சரி) (பிழை) என எழுதுக.**

1. தவில் மாட்டுத் தோலால் செய்யப்படுகிறது.
2. கோன்செர்தோ இசையில் வயலினுக்கே முக்கியத்துவமளிக்கப் படுகிறது.
3. கே போப் தென் கொரியாவில் உருவான இசையாகும்.
4. கொம்பாங் இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்டது.
5. கொம்பாங் தோல் பகுதியைப் பாலுலாங் (Belulang) என்றழைக்கப்படுகிறது.
6. நாதசுரத்துடன் தவில் தாளக் கருவியாகப் பயன்படுத்தப்படும்.
7. கோன்செர்தோவை உருவாக்கியவர் ஒல்.ஃப்கொங் அமாடேஸ் மொசோர்ட்.
8. கே போப் இசை ஹிப் ஹாப், ராக், போப், ஆர் என் பி ஆகிய இசை வகைகளின் கலவையாகும்.